මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/67** **2025.04.23**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
## உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள்

2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் பெரும் எண்ணிக்கையான அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களும் தோற்றவிருப்பதால் வாக்காளருக்குரிய உள்ளூர் அதிகார சபை வேட்பாளர்களின் பட்டியலை இலகுவாக பெற்றுக் கொள்ளும் முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

https://eservices.elections.gov.lk இணையிணைப்பி ஊடாக தேர்தல் இ-சேவையில் சஞ்சரித்து அதிலுள்ள **'குடிமக்களுக்கு'** என்ற இணையிணைப்பியினுள் பிரவேசித்து **'தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விபரம்'** என்ற இ-சேவையில் பிரவேசித்து தமது அடையாள அட்டை இலக்கத்தை உட்படுத்திய பின் 2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான தேருநர் பதிவு விபரம் தோன்றும். அதன் கீழுள்ள "KYC" என்ற இடையிணைப்பியின் ஊடாக தேருநருக்கு உரிய உள்ளூர் அதிகார சபை சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் விபரங்களை மிகவும் இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

ec.lk/vre என்ற இடையிணைப்பியின் மூலம் அல்லது பின்வரும் QR குறியீட்டை ஸ்கான் செய்வதன் மூலம் இலகுவாக உட்பிரவேசிக்க முடியும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்